# யடவத்த பிரதேச சபை

## மாத்தளை மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 26 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 அக்டோபர் 03 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

-------------------

தலைவருக்கு அனுப்பப்பட்ட எனது அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு யடவத்த பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மைகள்

------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) 02 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 98 கூரை தகடுகளின் பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை. அத்துடன், பௌதீக ரீதியான காணப்படாத குப்பை வண்டி பெறுமதி ரூபா 10,000 இனை கணக்குகளில் இருந்து அகற்றுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ரூபா 14,700 கிரயத்தையுடைய 07 பொருட் பதிவேட்டு விடயங்கள் பெறுமதி மற்றும் 01 ஏக்கர் 41 பர்சஸ் அளவினை கொண்டு மூன்று காணித் துண்டுகளின் பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) செலுத்த வேண்டிய ரூபா 12,264 இற்கான 06 கடன் கொடுத்தோர் மீதிகளின் பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) 2012 ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணம் ரூபா 17,926 மிகையாகவும் 2006 ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணம் ரூபா 4,963 குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெற வேண்டிய கணக்குகள்

---------------------------------------------

04 பெற வேண்டிய கணக்குகள் பெறுமதி ரூபா303,202 ஆகக் காணப்பட்டதுடன், 5 வருடங்களை விட மிகையான காலத்தை சேர்ந்த ரூபா 199,108 இற்கான மீதியும் இதில் அடங்குகின்றது.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

--------------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன் கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,878,227 ஆகும்.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 881,685 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமான சான்றுறுதி செய்வத்ற்கு முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள் விதிகள் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

-------------------------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் சுற்றுநிருப ஏற்பாடுகளுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டம் | |
| (i) பிரிவு 126 | துணை விதிகள் தயாரித்தல் மேற்கொள்ளப்படாமல் நீர் பவுசர் வெளிசாராருக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. |
| (ii) பிரிவு 175(டீ) | உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தை பெறாமல் அமைய ஊழியர் 03 பேரினை சேவையில் ஈடுபடுத்தி அவர்களுக்காக சம்பளம் மற்றும் படியாக ரூபா 364,841 தொகை ஒன்று செலுத்தப்பட்டுள்ளது. |

## 2 நிதி மீளாய்வு

--------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------------

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,494,207 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரோப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,337,789 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 156,418 இற்கான முன்னேற்றம் ஒன்றினை காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

------------------------------------------------------

பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் நிதிச் செயலாற்றுகை பற்றிய முக்கிய சில விகிதாசாரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) தொழிற்பாட்டு வருமானத்தில் மிகை நூற்றிற்கு 26.25 பெறுமதியொன்றின் கொண்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது அப் பெறுமதி நூற்றிற்கு 30.41 ஆக காணப்பட்டமையால் நூற்றிற்கு 4.16 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது.

(ஆ) மொத்த வருமானம் மற்றும் செலவுகளிடையே விகிதாசாரம் நூற்றிற்கு 73.75 ஆகக் காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் போது அவ் விகிதாசாரம் நூற்றிற்கு 68.58 ஆக காணப்பட்டமையால் விகிதாசாரத்தில் நூற்றிற்கு 5.17 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது.

### 2.3 வருமான நிருவாகம்

----------------------------

#### 2.3.1 ஏக்கர்வரி மற்றும் நீர் கட்டணம்

-----------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை ஏக்கர்வரி மீதி ரூபா 146,853 ஆகக் காணப்பட்டதுடன், நிலுவை நீர் கட்டண மீதி ரூபா 86,839 ஆகும்.

#### 2.3.2 அனுமதிப் பத்திரக் கட்டணம்

--------------------------------------------

மீளாய்வண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 47,510 நிலுவை அனுமதிப்பத்திர கட்டண மீதி 2004 ஆண்டிற்கு முன்னர் முதல் முன் கொண்டுவரப்பட்டுள்ளது.

#### 2.3.3 நீதி மன்றத் தண்டப்பணமும் முத்திரை கட்டணமும்

----------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,419,981 இற்கான நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் ரூபா 3,082,470 இற்கான முத்திரை கட்டணம் என்பன அறவிடப்படவேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

------------------------------

3.1 செயற்பாட்டு திறமையின்மை

------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) சபைக்குச் சொந்தமான கப் வண்டி ஒன்று மற்றும் டிரக்டர் வண்டி ஒன்று 2007 ஆண்டு முதல் மேலும் ஒரு கப் வண்டி 2008 ஆண்டு முதல் அடுத்த இரண்டு டிரக்டர்கள் 2011 ஆண்டு முதல் வருடாந்த வருமான அனுமதிப்பத்திரம் பெறாமல் ஓடியுள்ளது.

(ஆ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் பிரிவு 21 இன் பிரகாரம், கட்டட வரைபுகள் அங்கீகரிப்பதற்காக மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளின் போது கிடைத்திருந்த விண்ணப்பங்கள் 186 இல் 91 அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும் அவற்றில் 03 விண்ணப்பங்களுக்கு மாத்திரமே இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது.

(இ) கணிப்பீட்டு சபை அறிக்கை மற்றும் பேரேட்டு கணக்குகளிடையே காணப்பட்ட ரூபா 45,344 இற்கான வித்தியாசத்தை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்காமல் 2008 ஆண்டு முதல் கணக்குகளில் முன் கொண்டு வரப்பட்டுள்ளன.

3.2 பயன்படுத்தப்படாத ∴ குறைபயன்பாட்டு சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------

கிரயம் ரூபா 413,000 இற்கான 2 டிரக்டர் டேலர்கள், ரூபா 28,500 இற்கான மோட்டார் சைக்கிள் ஒன்று, பெறுமதி மதிப்பிடப்படாத 05 அலுவலக உபகரணங்கள் என்பன பல வருட காலமாக பயன்படுத்தப்படாமல் மற்றும் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. மாகாண சபை மற்றும் உள்ளுராட்சி அமைச்சில் இருந்து 2013 ஜுன் 18 ஆந் திகதி சபைக்கு கிடைத்திருந்த ரூபா 1,463,200 இற்கான டிரக்டர் மற்றும் டெயிலர் என்பவற்றை அத்தினம் தொடக்கம் எதற்கும் பயன்படுத்தி இருக்கவில்லை.

3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

--------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது ரூபா 946,703 இற்கான செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த குழாய் கிணற்றில் நீரில் அடங்கியுள்ள அமோனியா செறிவு நியம அளவை விட கூடுதலாக காணப்பட்டதால் குடிநீர் பயன்படுத்த முடியாது காணப்பட்டது.

3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டின் போது 15,178 இற்கான பெறுமதியுடைய 217 நூலகப் புத்தகங்களில் பற்றாக் குறை ஒன்று வெளிப்படுத்தப்பட்டதுடன் அப் பெறுமதியினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) முன்னைய 04 ஆண்டுகளுக்காக 04 வாகனங்களின் வருமான அனுமதிப் பத்திரம் பெறாமையால், அது தொடர்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 36,500 இற்கான தண்டப்பணம் செலுத்த நேரிட்டிருந்தது. எனினும், அதற்கு பொறுப்பானவர்களை பொறுப்பு சாட்டி நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.5 ஒப்பந்த நிருவாகம்

----------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | ஏற்பாடுகள் | நிர்மாண வேலைகளின் பெயர் | செலவிடப் பட்ட தொகை | பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட திகதி | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|
| | --------------- | ------------------ | ------------------ | ----------------------- | | ------------------------- |
| | | | ரூபா. | | | |
| (அ) | மகநெகும | டங்கன் பாதையை கொங்கிரீட் அச்சுக்கல் பதித்து அபிவிருத்தி செய்தல் | 500,000 | 2013.10.10 | (i) | மொத்த தூரமாகிய 44 மீற்றர் இடையே சில இடங்களில் இணைத் தொடர்பு அச்சுக் கற்கள் உடைந்திருத்தன. |
| | | | | | (ii) | கற்களுக்கு இடையே இடைவெளிகளை கற்தூள் போட்டு மூடியிருக்கவில்லை. |
| | | | | | (iii) | கற்கள் பதித்ததன் பின்னர் ரோலர் ஒன்று மூலம் பாதையில் மேற்பகுதியை முறைப்படி தயாரித் திருக்கவில்லை.. |
| (ஆ) | மகநெகும | செலகம நாகொல்லவில் இருந்து உடுகம வரை பாதையை கொங்கிரீட் அச்சுக் கல் பதித்து அபிவிருத்தி செயதல் | 500,000 | -மேற்படி- | (i) | பாதையின் ஆரம்பம் 17 வது மீற்றர் மூலம் இறுதி வரை மழைக்கு கழுவப்பட்டு சென்றுள்ளது. |
| | | | | | (ii) | கற்களுக்கிடையே இடைவெளி 1'' முதல் 1 ¼ வரை அளவில் விளகியுள்ளது. |
| (இ) | மகநெகும | உபஸ்கிரி மடதெனிய பாதையை கொங்கிரீட் அச்சுக் கற்கள் பதித்து அபிவிருத்தி செய்தல். | 1,500,00 | -மேற்படி- | (i) | பாதையின் இரு மருங்கலும் கொங்கிரீட் அச்சுக் கற்கள் பதித்த பகுதிகளில் கிடங்குகள் ஏற்பட்டிருந்தன. |
| | | | | | (ii) | மிகவும் பலவீன நியமங்களை உடைய அச்சுக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. |
| (ஈ) | மகநெகும | தலகஹகொட வரலத்கம பாதைக்கு கொங்கிரீட் அச்சு கற்கள் பதித்து அபிவிருத்தி செய்தல் | 500,000 | 2014.05.07 | (i) | பாதையின் இரு மருங்கிலும் கொங்கிரீட் மறைப்பு சுவர் 9ஒ6 இற்கு பதிலாக 6ஒ6 அளவில் போடப்பட்டுள்ள மையால் நீளமீட்டர் 180 இற்காக ரூபா 65,500 மிகையாக செலுத்தப்பட்டுள்ளது. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | (ii) | பாதையில் பதிக்கப்பட்டிருந்த கொங்கிரீட் அச்சு கற்கள் உரிய நியமங்களில் காணப்படவில்லை. கற்களின் மேற் பகுதி உடைந்து சேதமடைந்து காணப்பட்டது. |
| (உ) | கந்துரட உதான | தொம்பவெல கொஸ்கொடுவ பாதையில் கொங்கிரீட் பரப்புதல் | 148,748 | 2013.07.23 | (i) | கொங்கிரீட் கலவை உரிய நியமத்தில் காணப்படவில்லை என பாதையின் 03 இடங்களை உடைத்து பரிசோதித்த போது காணக்கூடியதாக இருந்தது. |
| | | | | | (ii) | கொங்கிரீட் பரப்புவதற்காக கன மீற்றர் ஒன்று ரூபா 11,413 வீதம் க.மீற்றர் 2.92 இற்காக ரூபா 33,256 மிகையாக செலுத்தப்பட்டுள்ளது. |
| (ஊ) | கந்துரட உதான | அஸ்கிரிய தொரகுப்புற கல்கந்த பாதைக்கு கொங்கிரீட் பரப்புதல் | 198,761 | 2014.05.07 | (i) | கொங்கிரீட் கலவை உரிய நியமங்களில் காணப்படவில்லை. |
| | | | | | (ii) | 4” கனத்தில் போடப்பட வேண்டிய கொங்கிரீட் 2.6 அங்குல கனத்தில் போடப்பட்டமையால் ரூபா 68,478 மிகையாகச் செலுத்தப்பட்டுள்ளது. |
| (எ) | கந்துரட உதான | பட்டஹிர வத்த பாதையில் கொங்கிரீட் பரப்புதல் | 500,000 | 2014.05.07 | (i) | பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை 14 இடங்களில் பாதை குறுக்காக வெடிப்படைந்து காணப்பட்டது. |
| | | | | | (ii) | 4” கனத்தில் போடப்பட வேண்டிய கொங்கிரீட் 2.6 அங்குல கனத்தில் போடப்பட்டமையால் ரூபா 169,939 மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. |

## 4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

--------------------------------------------------------------------

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------

வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களிடையே ஆண்டின் போது ஏற்பாடுகள் மாற்றிய பின்னர் 04 வருமான விடயங்களில் மதிப்பீட்டு வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கு இடையே நூற்றிற்கு 39 முதல் நூற்றிற்கு 99 இடையே வீச்சில் முரண்களும் 45 செலவு விடயங்கள் தொடர்பாக தேறிய ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்

இடையே நூற்றிற்கு 17 முதல் நூற்றிற்கு 98 வரை வீச்சில் முரண்கள் காணப்பட்டதுடன் 34 செலவு விடயங்களில் ரூபா 1,263,500 இற்கான ஏற்பாடுகளின் செலவுகள் ஒன்றும் மேற்கொள்ளப்படாமல் வேறு செலவு விடயங்களுக்கு மாற்றுதல் மற்றும் சேமித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாகவும் பயன்பட்டது என காணக்கூடியதாக இருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலுவை வருமான சேகரித்தல்

(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு

(உ) களஞ்சிய கட்டுப்பாடு

(ஊ) நிதிக் கட்டுப்பாடு